2017 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

ஜவுளிப் பூங்கா

***12611—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தெற்கு தொகுதி, அம்மாப்பேட்டை அல்லது கொண்டலாம்பட்டி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் தெற்கு தொகுதி, அம்மாப்பேட்டை அல்லது கொண்டலாம்பட்டி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு சேலம் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்.

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை அல்லது கொண்டலாம்பட்டி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களாயின், நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ் இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

[2017 மார்ச் 20

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் நீக்கமற நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஆராதனைக்குரிய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை (மேசையைத் தட்டும் ஒலி) நினைவில் நிறுத்தி, போற்றி வணங்கி, தாய் தந்த வரமாய், தாயுருவ தெய்வமாய் காத்து வருகின்ற கழகத்தின் பொதுச் செயலாளர் தியாகத் தலைவி சின்னம்மா அவர்களைப் போற்றி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரான தங்களையும், இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் நல்லரசை நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

"செய்யும் தொழிலெல்லாஞ் சீர்தூக்கி பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை – வையகத்தில்"

என்னும் சொல்லுக்கு ஏற்ப, நெய்யும் தொழிலை செய்யும் தொழிலாகக் கொண்ட நெசவாளர் பெருமக்கள் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக, கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரம், விலையில்லாமல் வழங்கி, சிறப்பு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்து, கூட்டுறவு நெசவாளர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கி, சூரிய ஒளி மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் உள்ளிட்ட எண்ணிலடங்கா ஏற்றமிகு திட்டங்கள் பல தந்த, கொற்றம் நடத்திய (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெற்று வருகின்ற இந்த நல்ல அரசிடம் நான் அறிய விரும்புவது என்னவென்றால்—சேலம் தெற்கு தொகுதி, நெசவாளர் பெருமக்கள் நிறைந்த ஜவுளித் தொழிலும், அதனைச் சார்ந்த உப தொழில்களும் கொண்ட பகுதி.

முற்பகல் 10–45

கைத்தறி துணிநூல் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களும். கைத்தறி, பட்டு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களும், விசைத்தறி, துணிநூல் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்களும் என பலவற்றைக் கொண்ட சேலம் தெற்கு தொகுதியின் பிரதான தொழில் ஜவுளி உற்பத்தியாகும். ஆசியா கண்டத்திலேயே முதன்மையான கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என பெயர்பெற்ற அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் சங்கத்தின்

2017 மார்ச் 20]

உறுப்பினர்களும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் சிறந்த கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கம் என பரிசு பெற்ற சேலம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களும் வசிக்கின்ற சேலம் தெற்கு தொகுதியில், அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வகையில் துணிகளை உற்பத்தி செய்கின்ற விசைத்தறி நெசவாளர்களும் அதிகம் வசித்து வருகின்றனர். தமிழகம் மட்டுமல்லாது; பிற மாநிலங்களிலும் உள்ள முன்னணி ஜவுளிக் கடைகளிலெல்லாம் விற்பனை செய்யப்படும் சிறப்பான திருமணப் பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். மானியக் கோரிக்கையில் பேசும்போது விரிவாகப் பேசலாம். இப்போது கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *சரி. திருமணப் பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களும், மேற்சொன்ன அனைத்து வகையான ஜவுளி உற்பத்தி செய்யும் நெசவாளப் பெருமக்களும் பிற தொழில் செய்பவர்களும் எங்கள் தொகுதியில்தான் வசித்து வருகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற இந்த நல்லரசு, சேலம் தெற்கு தொகுதியில் இருக்கின்ற நெசவாளப் பெருமக்களும், அந்த நெசவுத் தொழிலில் இருக்கின்ற பிரதான தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில், அம்மாப்பேட்டை அல்லது கொண்டலாம்பட்டி பகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்றை அமைத்துத் தந்தால், அந்தத் தொகுதிவாழ் மக்களுக்கும், நெசவுத் தொழில் புரிபவர்களுக்கும் ஏற்றமிகு பயன் தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைக்க குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலமும் மற்றும் 25 தொழிற்கூடங்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு அமையும் ஜவுளிப் பூங்காவின் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் ரூ.60 கோடி முதல் ரூ.65 கோடி வரையாகும். இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஜவுளிப் பூங்காக்களின் உட்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைப்பதற்காக மொத்த திட்டத் தொகையில் 40 சதவிகிதம்*

அல்லது ரூ.40 கோடிக்கு மிகாமல் மத்திய அரசின் மானியமாக வழங்கப்படுகிறது. தமிழக அரசின் சார்பாக 9% அல்லது 9 கோடி ரூபாய்க்கு மிகாமல் மானியம் வழங்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில் முனைவோர் அங்கே முன்வருவார்களென்று சொன்னால், எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, செய்து தரப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, ஒருங்கிணைந்த ஜவுளித் தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யும் என்று கூறியிருக்கின்றார். அதற்குண்டான notification–ஐ மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிவிப்பு செய்து, அந்த அறிவிக்கையின்படி அந்தத் தொழில்புரிவோர் மற்றும் தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்து, உடனடியாக அம்மா அவர்கள் வழியில் நடைபெறுகிற இந்த நல்லரசு ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைத்துத் தரவேண்டுமென்று மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, விவசாயம், நெசவு, பித்தளை மற்றும் எவர்சில்வர் பாத்திரம் செய்யும் தொழில்கள் அதிகமாக உள்ள இடம். அனைவரும் தொழில்கள் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுகிற ஒரு சூழ்நிலையில் உள்ளார்கள். அதிலும் குறிப்பாக, நெசவாளிகள் வேறு தொழில் செய்யாதவர்கள்; அவர்களுடைய நிலை மிக மோசமாக உள்ளது. அவர்கள் தங்கள் தொகுதியில் சமையல் தொழில் செய்தும், ஹோட்டல்களில் பணிபுரிந்தும் வறுமையுடன் குடும்பம் நடத்துகிறார்கள். அதனால்

2017 மார்ச் 20]

பட்டு உற்பத்தியும், கைத்தறித் துணிகளும் அதிகமாக உற்பத்தி செய்யும் கும்பகோணம், அதைச் சுற்றியுள்ள அம்மாசத்திரம், திருப்புவனம், திருநாகேஸ்வரம், பட்டீஸ்வரம், தாராசுரம் போன்ற பகுதிகளில் விவசாயிகளும், நெசவாளிகளும் நலம்பெற ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் ஒருங்கிணைந்த மாவட்டமான தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த நிலைமைகள் நன்றாக அவருக்கும் தெரியும். ஆகவே, முழு முயற்சி எடுத்துக்கொண்டு, ஜவுளிப் பூங்கா அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் 61 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 13 ஜவுளிப் பூங்காக்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. இந்தப் பூங்காக்களில் ஜவுளித் தொழில் சார்ந்த நூற்பு, சாயம் மற்றும் பதனிடுதல், உயர் தொழில்நுட்ப நெசவு, பின்னலாடை, ஆயத்த ஆடை உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் நான் முன்னரே தெரிவித்ததுபோல, 40 சதவிகித பங்குத் தொகையை மைய அரசும், 9 சதவிகித பங்குத் தொகையை மாநில அரசும் வழங்கி வருகிறது. மீதியிருக்கிற தொகையை நெசவாளர் பெருமக்கள், தொழில் முனைவோர் வழங்க முன்வருவார்கள் என்று சொன்னால், அங்கேயும் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.